ஓ ! தூய ஆவியானவரே, என் உள்ளத்தில் ஏராளமாக பொழியும்.

– புனித அகுஸ்தினார்

தூய ஆவியானவர் நமக்கு செபிக்கக் கற்றுத் தருகிறார்( உரோமையர்: 8:26) அந்த ஆவி “அப்பா, தந்தையே”, என கூப்பிடுகிறது. (கலாத்தியர்: 4:6) “இயேசுவே ஆண்டவர்” என்று அறிக்கையிடுகிறோம். (1 கொரிந்தியர் 12:3) தூய ஆவியானவர் நாம் மனம் திரும்புவதற்கும், நம் வாழ்வை அவர் பக்கம் திருப்புவதற்கும், நம்முடைய சிலுவையை நாமே தூக்கிக்கொண்டு இயேசுவைப் பின்செல்லவும் அழைக்கிறார். தூய ஆவியானவர் நம் உதவியாளர். நம் வாழ்க்கைப் பயணத்தில், நம்பிக்கை நிறைந்த நல்வாழ்வு வாழ நமக்கு உதவிசெய்கிறார்.

இதே ஆவியின் மூலம் தான் நாம் நற்பேறுள்ள குணங்கள் கொண்ட ஆண் பெண்களாக, உருவாகிறோம். இது நிச்சயமாக ஒரே இரவில் நடக்காது; கடின உழைப்பும், அல்லது ஒழுக்கமில்லாமலும் நடக்காது. எவ்வளவு தூரம் நாம் கடவுளின் ஆண் பெண்களாக வளர்கிறோம்; எந்த அளவுக்கு தூய ஆவியின் தூண்டுதல்களுக்கு கவனமுடன் செவிகொடுக்கிறோம் என்பதைப் பொறுத்தது. இந்த முயற்சியில் நாம் தனியாக இல்லை என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். ஏனென்றால் தூய ஆவியானவரே நமக்கு அவரின் கொடைகளான, ஞானம், மெய்யுணர்வு, அறிவுரைத்திறன், ஆற்றல், நுண்மதி, பக்தி, ஆண்டவரைப் பற்றிய அச்ச உணர்வு (எசாயா:11: 2) ஆகிய கொடைகளைத் தருகிறார். அதே ஆவியால் தான், அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் (கலாத்தியர்: 5: 25) ஆகிய கனிகளை நம்மை சுற்றியிருப்போருக்காகவும், கடவுளின் மாட்சிக்காகவும், நாம் பெற்றுக்கொள்கிறோம்.

“தந்தை என்னை அனுப்பியது போல நானும் உங்களை அனுப்புகிறேன்”(யோவான் 20:21) கிறிஸ்துவர்களாகிய நாம் கிறிஸ்துவால் நியமிக்கப்பட்டு, இந்த உலகின் சவால்களை எதிர்கொள்ள தூய ஆவியால் ஆற்றல் பெறுகின்றோம். கிறிஸ்துவோடு நாம் கொண்டுள்ள உறவைப் பிரிப்பதற்காக எழும் சவால்களை நாம் எதிர்கொள்ள நம்முடைய தெய்வீக உதவியாளர், நம் ஆலோசகர், இந்த வாழ்வில் நமக்காகப் போராடுபவரான தூய ஆவியோடு ஒட்டிக்கொள்வோம். அவரே நாம் மாபெரும் காரியங்களை சாதிக்கவும், உன்னதமான செயல்களை செய்யவும் நமக்கு பலம் தருகிறார். சாந்தமும், நம்முடைய நேரத்தைப் பகிர்ந்துகொள்ளும் தாராள உள்ளமும், கடினமானவர்களை எதிர்கொள்ளவும், கடினமான முடிவுகளை எடுக்கவும், தூய ஆவியானர் அருளைத் தருகிறார். தூய ஆவியானவர் மகிழ்ச்சியின் ஆவியானவர். இந்த மகிழ்ச்சி உலகினரோடு பகிர்ந்துகொள்ள நிரம்பி வழிகின்றது.

ஆண்டவரே, எங்கள் வாழ்வை நாங்கள் முழுமையாக வாழும்படி தூய ஆவியை பனிபொழிவு போல் எங்கள் மீது பொழிந்தருளும். ✝

### இன்றைய வாசகங்கள்:

திருத்தூதர் பணிகள்: 2: 1-11

திருப்பாடல்: 104: 1, 24, 29-31, 34

1 கொரிந்தியர்: 12: 3-7, 12-13

யோவான்: 20: 19-23

### வாரம் ஒரு வசனம்

நாம் மனம் திரும்ப தூய ஆவி நம்மை அழைக்கிறார்

INTERNAL CIRCULATION ONLY
BUL 22/2020

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

31 மே 2020

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பெந்தகோஸ்தே ஞாயிறு

மகிழ்ச்சியுடன் குணமளிக்க அனுப்பப்பட்டோம்



மாதாந்திர கருப்பொருள்:
**நிறைவான வாழ்வு**

# தூய ஆவியால் ஆற்றல் பெற்றோம்

“நீங்கள் கடவுளுடைய கோவிலென்றும் கடவுளின் ஆவியார் உங்களில் குடியிருக்கிறார் என்றும் உங்களுக்குத் தெரியாதா? (1 கொரிந்தியர்: 3: 16) இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் புனித பவுல் இந்தக் கேள்வியைக் கேட்டார்; இருந்தபோதும் இன்றும் மிகவும் பொருத்தமான கேள்வியாக அமைகின்றது. இன்றைய காலகட்டத்தில் இதைப் பற்றி நாம் அறிந்துள்ளோமா? நாம் ஆன்மீக ரீதியாக உள்ளவர்கள்; ஏனென்றால் தூய ஆவி நம்முள் குடிகொண்டுள்ளார்.




**மினவுதல் மாதா தேவாலயம்**
85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. கென்னத் கோபால்


*2020 ஆம் ஆண்டின் கருப்பொருள்*
***மகிழ்ச்சியுடன் குணமளிக்க அனுப்பப்பட்டோம்***
*2020 மே (வைகாசி) மாதத்தின் கருப்பொருள்:*
***நிறைவான வாழ்வு***

**பங்கு அலுவலக நேரம்**
திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்:** உயிர்ப்புக் காலம் 8 ஆம் ஞாயிறு 30 – 31 மே - 07 2020
தி.பணி 2 :1-11 தி.பா: 104: 1-2, 24, 27- 28, 29-30, 31, 34, 35 1 கொரி 20: 3-7, 12-13 யோவான் 20: 19-23
"ஆண்டவரே உம் ஆவியை அனுப்பி, மண்ணகத்தின் முகத்தைப் புதுப்பிக்கின்றீர்" ! " - தி.பா 104

***பெந்தகோஸ்தே ஞாயிறு ( மினவுதல் மாதா தேவாலயப் பங்குத் திருவிழா) மே 31, 2020 ( ஞாயிறு) 31-05-2020 மாலை 6.00 மணிக்கு மினவுதல் மாதா தேவாலயப் பங்குத் திருவிழா திருப்பலி இணையத்தின்வழி ஒளிபரப்பப்படும். நீங்கள் தொடர்புகொள்ள வேண்டிய இணைப்பு: http://live.visitationseremban.org***

நடமாட்டக் கட்டுப்பாட்டு நேரத்தில் (2020 மார்ச் 18 - 24 மே) வரை பெறப்பட்ட காணிக்கைகள்:

| பங்கு காணிக்கை | பங்கு காணிக்கை | தியான இல்லம் | பமமேகு உணவு வங்கி |
|---|---|---|---|
| மொத்த தொகை: | **RM18,990.00** | **RM12,638.00** | **RM1680.00** |

*உங்களின் அனைத்து வகையான பங்களிப்புகளுக்கும் மிக்க நன்றி.*
*இறைவன் உங்களை நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!*

**நன்கொடை / காணிக்கைகள்**
கீழ்க்கண்டவற்றில் எதற்கு நன் கொடை அல்லது காணிக்கை செலுத்துகின்றீர்கள் என்று குறிப்பிடவும்:
(1)பங்கின் நிதி (2) திருப்பலி கருத்துகள்
(3) ஆராதனை அறை சீரமைப்பு (4) பமமேப உணவு வங்கி

**உங்களுடைய தொகையை இணையத்தின்வழி பங்கின் வங்கிக் கணக்கில் செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம். விவரங்கள் :**

1.வங்கியின் பெயர்: **Public Bank Berhad**
2.வங்கிக் கணக்கில் உள்ள பெயர்:: **Church of Visitation**
3.வங்கிக் கணக்கு எண்: **3121194612**

**பணம் செலுத்தியபின் எதற்கு நீங்கள் பணம் செலுத்தினீர்கள் என்பதை குறிப்பிட மறவாதீர்கள்:**

(i) தொகை (ii) என்ன காராணம்:
(1) பங்கின் நிதி காணிக்கை
(2) திருப்பலி கருத்துகள் (பெயர்) - ஆன்ம இளைப்பாற்றி, நன்றி, அல்லது தனிப்பட்ட கருத்துகள்
(3) ஆராதனை அறை சீரமைப்பு
(4) பங்கு மனித வள மேம்பாட்டின் உணவு வங்கி ( கூடுதல் தகவல்களுக்கு: ஜோன் டேவிட்சன் (017-615 8961) அல்லது பெர்னதெத் (012- 2715840)

பங்கு அலுவலக குறிப்புகளுக்காக, நீங்கள் பணம் செலுத்திய ரசீதை பங்கின் மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும். serembanvisitation@gmail.com

கொவிட் 19 முன்னிட்டு அடுத்த அறிவிப்புகள் வரும் வரை திருப்பலிகள் ஆலயத்தில் நடைபெறாது.

**ஜூன் 1- (திங்கள்) முதல் ஜூன் 06 (சனி)வரை பங்கு அலுவலகம் காலை 8.30 - பகல் 1.30 வரை இயங்கும்**

பங்கின் மறு சுழற்சி திட்டம் அடுத்த அறிவிப்பு வரும்வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. எனவே தயவு செய்து உங்கள் மறு சுழற்சி பொருட்களைக் கொண்டுவந்து குருவானவரின் கார் நிறுத்துமிடத்தில் வைக்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறோம்.

***மரித்த ஆன்மாக்களுக்காக மன்றாடுவோம்***
கொவிட் 19 நோயால் மரித்த அனைத்து ஆன்மாக்களுக்காகவும்
***முடிவில்லாத ஒளி இவர்கள் மேல் ஒளிர்வதாக!***

➢ **தூய ஆவியாருக்கு செவிகொடுத்தல்**
அன்புள்ள சகோதர சகோதரிகளே! பெந்தகோஸ்தே பெருவிழாவும், நம்முடைய மினவுதல் தேவாலயப் பங்குத் திருவிழாவும் ஒன்றாக இணைந்து, மே 31, 2020 அன்று கொண்டாடப்படுகிறது. இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப்பின் தோமா இயேசுவை நேரிடையாகக் கண்டு நம்பிக்கைக் கொண்டார். இந்த நிகழ்வின் வழியாக கண்களால் காண்பவற்றில் அல்ல; மாறாக, தூய ஆவியாரின் குரலை கேட்டு நாம் நம்பவேண்டும். விவிலியத்தில் ஆபிரகாம் தொடங்கி பல மாபெரும் இறைவாக்கினர்கள் இவ்வாறுதான் வாழ்ந்து காட்டிச்சென்றனர். இதனால், ஒரு சொல்வழக்கு உள்ளது; கண்களால் பார்த்து வாழ்வதல்ல; மாறாக, நம்பிக்கையில் வாழ்வது. நீங்கள் கண்களால் பார்த்து வாழாமல், தூய ஆவியார் சொல்வதைக் கேட்பதால் வாழவேண்டும். எனவே கண்களால் பார்க்கும் காட்சிகளால் நீங்கள் சோர்ந்துபோகவேண்டாம். உங்கள் உள்ளத்தில் பேசும் தூய ஆவியானவரால் மன உறுதி கொள்ளுங்கள்.

உங்கள் அனைவருக்கும் நம்முடைய மினவுதல்மாதா தேவாலயத்தின் பங்குத் திருவிழா வாழ்த்துகள் மற்றும் பெந்தகோஸ்தெ பெருவிழாவின் வாழ்த்துகள்.
***அன்புடன்: அருட்பணி சேவி மற்றும் கென்னத்***

➢ **ஆலயங்கள் அடைபட்டு இருக்கும் இந்த மூன்று மாதத்தில் ஆலயத்தின் நிதிவரவு:** கடந்த மூன்று மாதங்களாக, ஆலயத்திற்கு நிதிப் பற்றாக்குறையால், நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது. ஆலயப் பராமரிப்பு மற்றும் பல்வேறு தேவைகளுக்காக உங்களுடைய வற்றாத ஆதரவு தேவைப்படுகிறது. இந்தக் காலகட்டத்தில் நீங்களும் பலவகைகளில் நிதி நெருக்கடியை எதிர்நோக்கியிருக்கின்றீர்கள் என்பதை நாம் அறிவோம். இருந்தபோதும், மிகவும் தாழ்மையோடு எங்கள் கோரிக்கையை உங்கள் முன் வைக்கிறோம். உங்களால் இயன்றது, சிறு தொகையாக இருந்தாலும் அதை மகிழ்வோடு ஏற்றுக்கொள்கிறோம். இதுவரை ஆதரவு அளித்துவரும் நன்கொடையாளர்களுக்கு எங்களுடைய மனமார்ந்த நன்றிகள். தொடர்ந்து உங்களை இறைவன் நிறைவாய் பலமடங்கு ஆசீர்வதிக்க மன்றாடுகிறோம்.

***"உன் செல்வத்தைக் கொண்டு, அவரைப் போற்று; உன் விளைச்சல்கள் எல்லாவற்றின் முதற்பலனையும் ஆண்டவருக்குக் காணிக்கையாக்கு: அப்பொழுது உன் களஞ்சியங்கள் நிறைந்திருக்கும்; குடங்களில் திராட்சை இரசம் வழிந்தோடும். (நீதிமொழிகள்: 3: 9-10)***

***இணையத்தின்வழி திருப்பலிகளில் பங்குகொள்ள. www.Tv.ArchKL.org***
30 மே முதல் ஜூன் 5 வரை)
சனிக்கிழமை: 30-05-2020: மாலை 6.00 மணி (தேசிய மொழி)
ஞாயிற்றுக்கிழமை: 31-05-2020 காலை 7.30 மணி ( தமிழ்)
காலை 9.00 மணி ( மாண்டரின்)
காலை 10.30 மணி (ஆங்கிலம்)
வாரநாட்கள்: (திங்கள் - வெள்ளி) ஜூன் 1-5 வரை மாலை 6.00 மணி